MAY 2023 **P/ID 28512/PCM1A**

Time : Three hours Maximum : 80 marks

PART A — (10 × 2 = 20 marks)

Answer any TEN questions.

1. What do you mean by Under Subscription?
குறைபங்கொப்பம் பற்றி நீ அறிவது யாது?

2. What is Firm Underwriting?
நிர்ம ஒப்புறுதி என்றால் என்ன?

3. Point out the nature of Goodwill.
நற்பெயரின் தன்மையை வெளிக்காட்டுக.

4. What is Net Assets method?
நிகர சொத்து மதிப்பு முறை என்றால் என்ன?

5. Define – Absorption.
நிறும ஈர்ப்பு - வரையறு.

6. What do you mean by Accumulated Profit?
திரட்டப்பட்ட லாபம் என்றால் என்ன?

7. Write a short note on Liquidation.
நிறும கலைப்பு பற்றி சிறு குறிப்பு வரைக.

8. What is Creditor's Voluntary Winding Up?
கடனீந்தோர்கள் தன்விருப்ப கலைப்பு என்றால் என்ன?

9. Define – Pre-acquisition Profit.
கையகப்படுத்தலுக்கு முன்னர் இலாபம் - வரையறு.

10. What is Statutory Reserve?
சட்ட முறை காப்பு என்றால் என்ன?

11. Write a short note on "Authorized Capital".
"அங்கீகரிக்கப்பட்ட மூலதனம்" பற்றி ஒரு சிறு குறிப்பை எழுதவும்.

12. Define – Reinsurance.
வரையறுக்க - மறுகாப்பீடு

PART B — (5 × 6 = 30 marks)

Answer any FIVE questions.

13. Kalyan Kumar Co. Ltd. was formed with a capital of Rs. 10,00,000 in Rs. 10 shares, the whole amount being issued to the public. The underwriting of these shares was as follows:

A – 35,000 B – 30,000 C – 20,000

D – 10,000 E – 3,000 F – 2,000

All the marked application forms were to go in relief of the underwriters whose stamp they bear. The application forms market by the underwriters were:

A – 10,000 B – 22,500 C – 20,000

D – 7,500 E – 5,000 F – Nil

Applications for 20,000 shares were received on forms not marked. Draw up a statement showing the number of shares each underwriter had to take up.

கல்யாண்குமார் நிறுமம் ரூ.10,00,000-ம் முதலுடன் ரூ.10 வீதப் பங்குகளை கொண்டு பொதுமக்களுக்கு வெளியிட்டது. இந்த பங்குகளை பின்வருமாறு ஒப்புறுதி செய்யப்பட்டது.

A – 35,000 B – 30,000 C – 20,000

D – 10,000 E – 3,000 F – 2,000

அனைத்து குறியீட்டு விண்ணப்பங்களும் ஒப்புறுதியாளர்களின் பொறுப்பை தீர்க்க அவரவரர்களின் முத்திரையை தாங்கிய விண்ணப்பம் பயன்படுகிறது. ஒப்புறுதியாளர்களின் குறியீட்டு விண்ணப்பங்கள் பின்வருமாறு:

A – 10,000 B – 22,500 C – 20,000

D – 7,500 E – 5,000 F – Nil

20,000 பங்குகளான பெறப்பட்ட விண்ணப்ப படிவத்தில் எந்த குறியீடுகளும் இல்லை. ஒவ்வொரு ஒப்புறுதியாளரும் எடுத்துக் கொள்ள வேண்டிய பங்குகளின் எண்ணிக்கையை காட்டும் அறிக்கை தயாரிக்கவும்.

14. From the following information, calculate the value of goodwill on the basis of 3 years purchase of super profit.

(a) Average capital employed in the business is Rs. 20,00,000.

(b) Rate of interest expected from capital having regard to the risk involved is 10%.

(c) Net trading profits of the firm for the past three years were Rs. 3,50,400; Rs. 2,80,000 and Rs. 3,10,000.

(d) Fair remuneration to the partners for their services is Rs. 48,000 per annum.

(e) Sundry assets of the firm are Rs. 23,50,400 and current liabilities Rs. 95,110.

பின்வரும் தகவல்களிலிருந்து மூன்று ஆண்டு மிகை இலாப கொள்முதல் அடிப்படையில் நற்பெயர் மதிப்பு கணக்கிடுக.

(அ) இந்த தொழிலில் சராசரி மூலதன பயன்பாடு ரூ.20,00,000

(ஆ) இந்த மூலதன இடர்பாட்டிற்கு எதிர்பார்க்கப்படும் ஆதாய வட்டி விகிதம் 10% ஆகும்.

(இ) கடந்த மூன்று ஆண்டுகளில் நிகர வியாபார இலாபம் ரூ.3,50,400; ரூ.2,80,000 மற்றும் ரூ.3,10,100 ஆகும்.

(ஈ) கூட்டாளிகளின் சேவைக்காக ஆண்டிற்கு ரூ.48,000 ஊதியம் நியாயமானது ஆகும்.

(உ) இந்தி நிறுவனத்தின் பற்பல சொத்துகள் ரூ.23,50,400 மற்றும் நடப்பு பொறுப்புகள் ரூ.95,110.

15. The following are the information about Silver Ltd.

Balance Sheet of Silver Ltd. as on 31.12.1993

Liabilities	Rs.	Assets	Rs.
Paid up Capital:		Fixed Assets:	
1000, 6% Pref. Shares of Rs. 100 each	1,00,000	Land and Buildings	2,00,000
2000, Equity Shares of Rs. 100 each, fully paid	2,00,000	Plant and Machinery	2,20,000
3000, Equity Shares of Rs. 100 each, 50 paid up	1,50,000	Current Assets:	
		Stock	1,00,000
		Debtors	1,00,000
		Cash at bank	30,000
Secured Loans:		Miscellaneous Expenditure:	
6% Debentures (floating charge on all assets)	1,00,000	Profit and Loss a/c	1,00,000
Others (Mortgage on L and B)	1,00,000		
Current Liabilities:			
Sundry Creditors	90,000		
Income Tax	10,000		
	7,50,000		7,50,000

The company went into liquidation on 1st January 1994. The preference dividend was in arrears for three years. The arrears are payable on liquidation.

The assets were realized as follows:

Land and Buildings – Rs. 2,40,000

Plant and Machinery – Rs. 1,80,000

Stock – Rs. 70,000

Debtors – Rs. 60,000

The expenses of liquidation amounted to Rs. 8,000. The liquidator is entitled to a commission at 2% on all assets realized and 3% on amounts distributed to unsecured creditors. All payments were made on 30th June 1994. Prepare Liquidator's Statement of account.

சில்வர் நிறுமம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு:

31.12.1993 வரையான இருப்பு நிலை குறிப்பு

பொறுப்புகள்	ரூ.	சொத்துகள்	ரூ.
செலுத்தப்பட்ட முதல் :		நிலை சொத்துகள் :	
1000, 6% முன்னுரிமை பங்குகள் ரூ.100 வீதம்	1,00,000	நிலம் மற்றும் கட்டிடம்	2,00,000
2000, சமநிலைப் பங்குகள் ரூ.100 வீதம்	2,00,000	பொறி மற்றும் இயந்திரம்	2,20,000
3000, சமநிலைப் பங்குகள் ரூ.100 வீதம் ரூ.50 செலுத்தியது	1,50,000	நடப்பு சொத்துக்கள்:	
		சரக்கிருப்பு	1,00,000
		கடனாளிகள்	1,00,000
		வங்கி வச ரொக்கம்	30,000
பிணைய கடன்கள்:		இதர செலவுகள் :	
6% கடனீட்டு பத்திரம் (மிதவைப் பொறுப்பு அனைத்து சொத்து மீதும்)	1,00,000	இலாப நட்ட க/கு	1,00,000
மற்றவை (நி & க அடமானம்)	1,00,000		
நடப்பு பொறுப்புகள் :			
பற்பல கடனீந்தோர்கள்	90,000		
வருமான வரி	10,000		
	7,50,000		7,50,000

இந்த நிறும் 1.1.1994 அன்று கலைப்புக்குள்ளானது. முன்னுரிமை பங்காதாயம் மூன்று ஆண்டுகளாக நிலுவை. நிலுவை கலைப்பின் போது செலுத்தப்பட்டது.

சொத்துக்கள் பின்வருமாறு விற்று தீர்வு செய்யப்பட்டது : நிலம் மற்றும் கட்டிடங்கள் - ரூ.2,40,000, பொறி மற்றும் இயந்திரம் - ரூ.1,80,000 சரக்கிருப்பு ரூ.70,000 கடனாளிகள் - ரூ.60,000

கலைப்பிற்கான செலவு தொகை ரூ.8,000 கலைப்பாளரின் கழிவு : அனைத்து சொத்துக்கள் தீர்வையிலும் 2% மற்றும் பிணையமற்ற கடனீந்தோர் பகிர்ந்தளிக்கப்படும் தொகையில் 3% ஆகும். (அனைத்து சொத்துகள் விற்று (30 ஜூன், 1994) தீர்வு செய்யப்பட்டது) கலைப்பாளரின் கணக்கு அறிக்கை தயாரிக்கவும்.

16. On 31st March, 1996 the balance sheets of H Ltd. and its subsidiary S stood as follows:

Liabilities	H Ltd. Rs.	S Ltd. Rs.	Assets	H Ltd. Rs.	S Ltd. Rs.
Equity share capital	8,00,000	2,00,000	Fixed assets	5,50,000	1,00,000
General reserve	1,50,000	70,000	75% Shares in S Ltd. (at cost)	2,80,000	–
Profit and Loss a/c	90,000	55,000	Stock	1,05,000	1,77,000
Creditors	1,20,000	80,000	Other current assets	2,25,000	1,28,000
	11,60,000	4,05,000		11,60,000	4,05,000

Draw a consolidated balance sheet as at 31st March, 1996 after taking into consideration the following information:

(a) H Ltd. acquired the shares on 31st July, 1995.

(b) S Ltd. earned price of Rs. 45,000 for the year ended 31st March, 1996.

(c) In January, 1996 S Ltd. sold to H Ltd. goods costing Rs. 15,000 for Rs. 20,000.

On 31st March, 1996 half of these goods were lying as unsold in godown of H Ltd.

H நிறுமம் மற்றும் அதன் துணை நிறுமமான S நிறுமத்தின் மார்ச் 31, 1996 வரையான இருப்பு நிலைக்குறிப்பு பின்வருமாறு:

பொறுப்புகள்	H நிறுமம் ரூ.	S நிறுமம் ரூ.	சொத்துக்கள்	H நிறுமம் ரூ.	S நிறுமம் ரூ.
சமநிலை பங்கு முதல்	8,00,000	2,00,000	நிலை சொத்துகள்	5,50,000	1,00,000
பொது காப்பு	1,50,000	70,000	S நிறுமத்தின் 75% பங்குகள் (அடக்கத்தில்)	2,80,000	–
இலாப நட்ட கணக்கு	90,000	55,000	சரக்கிருப்பு	1,05,000	1,77,000
கடனீந்தோர்கள்	1,20,000	80,000	மற்ற நடப்பு சொத்துகள்	2,25,000	1,28,000
	11,60,000	4,05,000		11,60,000	4,05,000

பின்வரும் தகவல்களை கருத்தில் எடுத்துக் கொண்டு மார்ச் 31, 1996 வரையான தொகுப்பு இருப்பு நிலைக்குறிப்பு தயாரிக்கவும்.

(அ) H நிறுமத்தால் ஜூலை 31, 1995 அன்று பங்குகளை கைப்பற்றியது.

(ஆ) S நிறுமத்தால் ஆண்டு இறுதியான மார்ச் 31, 1996 வரை ரூ.45,000 இலாபம் ஈட்டியது.

(இ) ஜனவரி 1996 அன்று S நிறுமத்தால் H நிறுமத்திற்கு ரூ.15,000 அடக்கமுள்ள சரக்கை ரூ.20,000 க்கு விற்பனை செய்துள்ளது. மார்ச் 31, 1996 அன்று அந்த சரக்கில் பாதி அளவு விற்பனையாகாமல் H நிறுமத்தின் பண்டகசாலையில் உள்ளது.

17. From the following information relating to Lakshmi Bank Ltd. Prepare the profit and loss account the year ended 31st December 2017.

Particulars	Rs.	Particulars	Rs.
Rent received	72,000	Salaries and allowance	2,18,800
Exchange and commission	32,800	Postage	5,600
Interest on fixed deposit	11,00,000	Sundry Charges	4,000
Interest on SB Accounts	2,72,000	Directors and Auditor's fees	16,800
Interest on Overdrafts	2,16,000	Printing	8,000
Discount on Bills discounted	7,80,000	Law charges	3,600
Interest on Current Accounts	1,68,000	Locker Rent	1,400
Interest on cash credits	8,92,000	Transfer Fees	2,800
Depreciation bank property	20,000	Interest on Loans	10,36,000

பின்வரும் தகவல்கள் இலட்சுமி வங்கி நிறுமத்திற்குரியது. இதிலிருந்து டிசம்பர் 31, 2017 வரையான இலாபம் மற்றம் நட்ட கணக்கு தயார் செய்யவும்.

விபரம்	ரூ.	விபரம்	ரூ.
வாடகை பெற்றது	72,000	ஊதியம் மற்றும் படி	2,18,800
மாற்றுதல் மற்றும் கழிவு	32,800	தபால்	5,600
நிலை வைப்பு மீதான வட்டி	11,00,000	பற்பல செலவுகள்	4,000
சேமிப்பு கணக்கு மீதான வட்டி	2,72,000	இயக்குநர்கள் மற்றும் தணிக்கையர் கட்டணம்	16,800
மேல்வரைப்பற்று மீதான வட்டி	2,16,000	அச்சு	8,000
மாற்று சீட்டு தள்ளுபடி மீதான வட்ட ஒதுக்கு	7,80,000	சட்டச் செலவுகள்	3,600
நடப்பு கணக்கு மீதான வட்டி	1,68,000	பெட்டக வாடகை	1,400
ரொக்க கடன் மீதான வட்டி	8,92,000	மாற்றம் கட்டணம்	2,800
வங்கி சொத்து தேய்மானம்	20,000	கடன்கள் மீதான வட்டி	10,36,000

18. A life fund has been ascertained without adjusting the following, Calculate the correct Life Assurance Fund.

	Rs.
Life Assurance fond as ascertained	56,70,000
Unadjusted items:	
Premium outstanding	2,30,000
Claims outstanding	1,80,000
Claims covered under re-insurance	20,000
Claims of last year paid during the year	5,000
Bonus paid in cash	14,000
Bonus utilized in reduction of premium	16,000
Interest and dividends accrued	7,500
Income tax there on	800

ஒரு ஆயுள்நிதி, பின்வருவனவற்றை சரிகட்டாமல் கண்டுபிடிக்கப்பட்டது. எனவே சரியான ஆயுள் காப்பீடு நிதியை கணக்கிடுக.

	ரூ.
கண்டுபிடிக்கப்பட்ட ஆயுள் காப்பீடு	56,70,000
சரிகட்டபடாத இனாம் :	
முனைமம் நிலுவை	2,30,000
கோரல் நிலுவை	1,80,000
மறுகாப்பீட்டின் கீழ் கோரல் சார்ந்தது	20,000
கடந்த ஆண்டு கோரல் நடப்பு ஆண்டு செலுத்தியது	5,000
ரொக்கமாக வெகுமதி செலுத்தியது	14,000
முனைமத்தை குறைக்க வெகுமதி பயன்படுத்தியது	16,000
வட்டி மற்றும் பங்காதயம் உருவாக்கம்	7,500
வருமான வரி போன்றவை	800

19. What are the difference between Internal Reconstruction and External Reconstruction?

உள் புனரமைப்பு மற்றம் வெளிப்புற மறுசீரமைப்பு ஆகியவற்றுக்கு இடையே உள்ள வேறுபாடுகள் என்ன?

PART C — (3 × 10 = 30 marks)

Answer any THREE questions.

20. In January 2018, Green Ltd. issued 2,000 shares of Rs. 100 each at a discount of 5%. The issue was fully subscribed by paying Rs. 20 per share on application. The balance was payable as to Rs. 25 on allotment (with adjustment of discount); Rs. 20 on first call and Rs. 30 on final call.

All the calls were made and received with an exception of final call on 200 shares held by one Mr. Zahir. Pass journal entries to record the above and show the resultant balance sheet.

ஜனவரி 2018 அன்று கிரின் நிறுமம் 2,000 பங்குகளை ரூ.100 வீதம் 5% தள்ளுபடியில் வெளியிட்டது. விண்ணப்பத்தின் போது ரூ. 20 செலுத்துகையுடன் முற்றிலும் வெளியிடப்பட்டு பங்கொப்பம் செய்யப்பட்டது. மீதி தொகை ரூ.25 ஒதுக்கீட்டின் (தள்ளுபடி சரி செய்யப்பட்டு) போதும் ரூ. 20 முதல் அழைப்பின் போதும் ரூ. 30 இறுதி அழைப்பின் போதும் செலுத்த வேண்டும்.

அனைத்து அழைப்புகளும் செய்யப்பட்டு தொகை பெறப்பட்டது. ஆனால். திரு. ஜாகிர் அவர்கள் 200 பங்குகளுக்கான இறுதி அழைப்பு தொகை செலுத்தவில்லை.

மேலே உள்ள பரிவர்த்தனைகளுக்கு குறிப்பேட்டுப் பதிவு தந்து இருப்பு நிலைக்குறிப்பு தயாரிக்கவும்.

21. On 31st December 1998, the balance sheet of Ganesh Ltd. was as follows:

Liabilities	Rs.	Assets	Rs.
Share Capital:			
15,000 Equity Shares of Rs. 100	15,00,000	Land and Building	6,60,000
Profit and Loss a/c	3,09,000	Machinery	2,85,000
Sundry Creditors	2,31,000	Stock	10,50,000
Bank Overdraft	60,000	Sundry Debtors	4,65,000
Provision for taxation	1,35,000		
Dividend equalization fund	2,25,000		
	24,60,000		24,60,000

The net profit of the company, after deducting all working charges and providing for depreciation and taxation were as under:

1994 – Rs. 2,55,000;

1995 – Rs. 2,88,000;

1996 – Rs. 2,70,000;

1997 – Rs. 3,00,000; and

1998 – Rs. 2,85,000

On 31st December 1998, Land and Buildings were valued at Rs. 7,50,000 and machinery at Rs. 4,50,000. In view of the nature of the business, it is considered that 10% is a reasonable return on capital.

Calculate the value of the company's share after taking into account the revised values on fixed assets and your own valuation of goodwill based on four years purchase of the annual super profits.

பின்வருவன கணேஷ் நிறுமத்தின் டிசம்பர் 31, 1998 வரையான இருப்பு நிலைக்குறிப்பாகும்.

பொறுப்புகள்	ரூ.	சொத்துகள்	ரூ.
பங்கு மூலதனம் :			
15,000 சமநிலைப் பங்குகள் @ ரூ.100	15,00,000	நிலம் மற்றும் கட்டிடம்	6,60,000
இலாப நட்ட க/கு	3,09,000	இயந்திரம்	2,85,000
பற்பல கடனீந்தோர்கள்	2,31,000	சரக்கிருப்பு	10,50,000
வங்கி மேல்வரைப்பற்று	60,000	பற்பல கடனாளிகள்	4,65,000
வரிக்கான ஒதுக்கு	1,35,000		
பங்காதய சமன்பாட்டு நிதி	2,25,000		
	24,60,000		24,60,000

இந்த நிறுமத்தின் தேய்மானம், வரி மற்றும் அனைத்து செயல்பாட்டு செலவுகளையும் கழித்த பிறகு உள்ள நிகர இலாபம் பின்வருமாறு

1994 – ரூ. 2,55,000;

1995 – ரூ. 2,88,000;

1996 – ரூ. 2,70,000;

1997 – ரூ. 3,00,000; மற்றும்

1998 – ரூ. 2,85,000

டிசம்பர் 31, 1998 அன்று நிலம் மற்றும் கட்டிடம் ரூ.7,50,000 -க்கும் இயந்திரம் ரூ.4,50,000 என மதிப்பிடப்பட்டது. இந்த தொழில் தன்மையை கருத்தில் கொள்ளும் போது, முதலீட்டின் மீது 10% ஆதாயம் எதிர்பார்க்கப்படுகிறது. நான்கு ஆண்டு கொள்முதல் மிகை இலாப அடிப்படையில் நற்பெயர் மதிப்பை கணக்கிட்டு நிலைச் சொத்துக்களின் மதிப்பை மாற்றியமைத்து இந்த நிறுமத்தின் பங்கு மதிப்பை கணக்கிடவும்.

22. Given below is the balance sheet of Hard Luck Ltd. as at 31st March 1995.

Balance Sheet

Liabilities	Rs.	Assets	Rs.
40,000 shares of Rs. 10 each fully paid	4,00,000	Land and Building	3,20,000
Creditors	3,00,000	Plant and Machinery	1,30,000
		Stock	70,000
		Debtors	1,20,000
		Cash	500
		Preliminary Expenses	5,000
		Profit and Loss a/c	54,500
	7,00,000		7,00,000

The following scheme of reconstruction was arranged:

(a) The company to go into liquidation and a new company, Lucky Ltd. with an authorized capital of Rs. 8,00,000 to be formed to take over the assets and liabilities.

(b) Preferential Creditors of Rs. 10,000 include in the above balance sheet are to be paid in full.

(c) Unsecured Creditors to receive either (i) 50 per cent of their claim in cash or (ii) 6 per cent debentures in the new company, equivalent to their claims at par.

(d) Shareholder in Hard Luck Ltd. to be allotted one share in the new company of Rs. 10 each, Rs. 5 paid for every existing share held by them.

(e) Reconstruction cost amounting to Rs. 6,000 to be paid by Hard Luck Ltd. from cash made available by the new company.

Half of the unsecured creditors in value opted out for immediate cash payment for which purpose necessary cash was made available by the new company, which made a call of Rs. 5 each on the partly paid share allotted as aforesaid. The new company valued all assets (except Land and Buildings) taken over from Hard Luck Ltd. at book values. Prepare the balance sheet of the new company after the above transactions are concluded.

ஹார்ட் லக் லிமிடெட் இன் 31 மார்ச் 1995 வரையான இருப்புநிலை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

பொறுப்புகள்	ரூ.	சொத்துகள்	ரூ.
40,000 பங்குகள் ரூ.10 வீதம் முற்றிலும் செலுத்தப்பட்டது	4,00,000	நிலம் மற்றும் கட்டிடம்	3,20,000
கடனீந்தோர்கள்	3,00,000	பொறி மற்றும் இயந்திரம்	1,30,000
		சரக்கிருப்பு	70,000
		கடனாளிகள்	1,20,000
		ரொக்கம்	500
		பூர்வாங்க செலவு	5,000
		இலாப நட்ட க/கு	54,500
	7,00,000		7,00,000

பின்வரும் புனரமைப்பு திட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது:

(அ) கலைப்புக்கு செல்லும் நிறுவனம் மற்றும் ஒரு புதிய நிறுவனம், லக்கி லிமிடெட், ரூ.8,00,000 அங்கீரிக்கப்பட்ட மூலதனத்துடன் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் கையகப்படுத்த வேண்டும்.

(ஆ) மேலே உள்ள இருப்புநிலைக் குறிப்பில் உள்ள ரூ.10,000 முன்னுரிமைக் கடனாளிகள் முழுமையாக செலுத்தப்பட வேண்டும்.

(இ) பாதுகாப்பற்ற கடனளிப்பவர்கள் (i) அவர்களின் கோரிக்கையில் 50 சதவீதத்தை பணமாகவோ அல்லது (ii) புதிய நிறுவனத்தில் 6 சதவீத கடனீட்டுப் பத்திரங்களையோ, அவர்களின் உரிமைகோரல்களுக்கு இணையாகப் பெறுவார்கள்.

(ஈ) ஹார்ட் லக் லிமிடெட் பங்குதாரருக்கு புதிய நிறுவனத்தில் தலா ரூ.10 வீதம் ஒரு பங்கை ஒதுக்க வேண்டும். அவர்கள் வைத்திருக்கும் ஒவ்வொரு பங்குக்கும் ரூ.5 செலுத்தப்படும்.

(உ) புனரமைப்புச் செலவு ரூ.6,000 புதிய நிறுவனத்தால் கிடைக்கப்பெற்ற பணத்திலிருந்து ஹார்ட் லக் லிமிடெட் செலுத்த வேண்டும்.

மதிப்பில் பாதுகாப்பற்ற கடனாளர்களில் பாதி பேர் உடனடியாக ரொக்கப் பணம் செலுத்துவதைத் தவிர்த்தனர். இதன் நோக்கத்திற்காகத் தேவையான பணம் புதிய நிறுவனத்தால் கிடைக்கப்பெற்றது. இது மேற்கூறியப்படி ஒதுக்கப்பட்ட பகுதியளவு செலுத்தப்பட்ட பங்கின் மீது தலா ரூ. 5க்கு அழைப்பு விடுத்தது. புதிய நிறுவனம் ஹார்ட் லக் லிமிடெட் நிறுவனத்திடமிருந்து எடுக்கப்பட்ட அனைத்து சொத்துக்களையும் (நிலம் மற்றும் கட்டிடங்கள் தவிர) புத்தக மதிப்புகளில் மதிப்பிட்டது. மேற்கண்ட பரிவர்த்தனைகள் முடிந்த பிறகு புதிய நிறுவனத்தின் இருப்புநிலைக் குறிப்பைத் தயாரிக்கவும்.

23. From the Balance Sheets given below prepare a consolidated balance sheet of Moti Ltd. and its subsidiary company Choti Ltd. shares were acquired on 1st January 2012. The net profit of Choti Ltd. as on 1.7.2011 is Rs. 4,500 and during the year net profit is Rs. 6,000.

Balance Sheet as on 30th June 2012

Liabilities	Moti Ltd. (Rs.)	Choti Ltd. (Rs.)	Assets	Moti Ltd. (Rs.)	Choti Ltd. (Rs.)
Share Capital:			Fixed Assets		
Shares of Rs. 10 each	1,50,000	30,000	Land and Building	1,20,000	20,000
General reserve	20,000	–	Plant and M/C	20,000	20,000
Creditors	25,000	9,500	Current Assets	58,000	10,000
P and L a/c	30,000	10,500	Investment:		
			2000 shares of Rs. 10 each in Choti Ltd.	27,000	–
	2,25,000	50,000		2,25,000	50,000

பின்வரும் இருப்பு நிலைக் குறிப்புகளிலிருந்து மோட்டி நிறுமம் மற்றும் அதன் துணை நிறுமம் சோட்டி நிறுமத்தின் தொகுப்பு இருப்பு நிலைக்குறிப்பு தயாரிக்கவும். இந்த நிறுமப் பங்குகளை ஜனவரி 1, 2012-ல் கைப்பற்றியது. சோட்டி நிறுமத்தின் இலாப நட்ட கணக்கு 1.7.2011 அன்று ரூ.4,500 இலாபம் இருப்பு காட்டியது மற்றும் நடப்பு ஆண்டு நிகர இலாபம் ரூ.6,000 ஆகும்.

ஜூன் 30, 2012 வரையான இருப்புநிலைக் குறிப்பு

பொறுப்புகள்	மோட்டி ரூ.	சோட்டி ரூ.	சொத்துக்கள்	மோட்டி ரூ.	சோட்டி ரூ.
பங்கு முதல்:			நிலை சொத்துக்கள்		
ரூ.10 வீத பங்குகள்	1,50,000	30,000	நிலம் மற்றும் கட்டிடம்	1,20,000	20,000
பொதுகாப்பு	20,000	–	பொறி மற்றும் இயந்திரம்	20,000	20,000
கடனீந்தோர்கள்	25,000	9,500	நடப்பு சொத்துகள்	58,000	10,000
இலாப மற்றும் நட்ட க/கு	30,000	10,500	முதலீடுகள்		
			சோட்டி நிறுமத்தின் 2000 பங்குகள் @ ரூ.10	27,000	–
	2,25,000	50,000		2,25,000	50,000

24. Discuss the difference between General Insurance and Life Insurance.

பொதுக் காப்பீடு மற்றும் ஆயுள் காப்பீடு ஆகியவற்றுக்கு இடையே உள்ள வேறுபாட்டைப் பற்றி விவாதிக்கவும்.